<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (MACT) கிருஷ்ணகிரி</u>

**<u>M.C.O.P No.261/2025, Date: 10.08.2026</u>**

The Oaths Act 1969, Act No.44/1969ன் விதிமுறைகளின் படி 10.08.2026 நாளாகிய இன்று Tr.M.Padmanaban,B.A.B.L., சிறப்பு சார்பு நீதிபதி (MACT) அவர்கள் முன்னிலையில் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : திருப்பதி | **வயது** | : |
| **தந்தை பெயர்** | : | **மாவட்டம்** | : |
| **வேலை** | : | **கிராமம்** | : |
| **அலைபேசி எண்.** | : | | |

எ.ம.சா.2

<u>முதல் விசாரணை:–</u> <u>(2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

நான் மனுவின் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் ஆவேன். எனது உரிமையாளர் பெயர் சபரி. 1ம் எதிர்மனுதாரரிடம் நான் விபத்திற்கு முன்பு ஒன்றரை வருடங்களாக வேலை செய்து வந்தேன். எனக்கு சாலைவிதி முறைகள் நன்கு தெரியும். கனரக வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளது. கடந்த 14.12.2024ம் தேதி TN.40A–3065 என்ற ஈச்சர் வாகனத்தை ஓட்டினேன். காவேரிப்பட்டிணத்திலிருந்து – பாலக்கோடு சாலையில் கதிரிபுரம் மேடு, கருப்புசாமி ஓட்டல் அருகே இன்டிகேட்டர் போட்டு வாகனத்தை இடதுபுற சாலையில் சிக்னல் போட்டு நிறுத்தியிருந்தேன். அப்போது பின்னால் வந்த இருசக்கர வாகனம் ஈச்சர் வாகனத்தின் வலதுபுற பின்பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின்போது இருசக்கர வாகனத்தில் வந்த நபர் தலைகவசம் அணியவில்லை. அருகிலிருந்தவர்கள் ஆம்புலன்ஸ்க்கு போன்செய்து அவரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டுநர்தான் காரணம். போலிசார் விசாரிக்கும்போது நடந்த விவரத்தை சொன்னேன். விபத்திற்கு நான் காரணம் அல்ல என்று சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை:– (மனுதாரர் தரப்பில்)</u>

1. என்னுடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் என்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்மீது தவறில்லை என்பதற்கு நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எந்தவித சிக்னலும் இல்லாமல் வலதுபுறத்தில் திரும்பி இடதுபுறம் வந்ததால்தான் பின்னால் வந்த இருசக்கர வாகனம் வலதுபக்க டயரில் இடித்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2. என்னுடைய தவறினால் விபத்து ஏற்பட்டது என்பதால்தான் என்னுடைய உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கின் ஆஜராகி மறுப்புரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்மீதுள்ள தவறை தெரியப்படுத்தக்கூடாது என்று தற்போது நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

M PADMANABAN — Digitally signed by M PADMANABAN

சிறப்பு சார்பு நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிமன்றம்(MACT),
கிருஷ்ணகிரி.